செய்தி வெளியீடு எண்:875 நாள்:12.10.2021

செய்தி வெளியீடு

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த திருமணமாகாத ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு ஓய்வூதியத் தொகையாக மாதந்தோறும் ரூ.1000/– வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தொகை பெரும்பாலான பயனாளிகளுக்கு வங்கி முகவர்கள் வாயிலாக பயோமெட்ரிக் இயந்திரம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியத் தொகை வழங்க சில வங்கி முகவர்கள் பயனாளிகளிடமிருந்து பணம் பெறுவதாக புகார்கள் வரப்பெற்றுள்ளது. இந்நிலையில், வங்கி முகவர்கள் பயனாளிகளிடம் ஓய்வூதியம் வழங்க பணம் பெறுதல் கூடாது என அனைத்து வங்கிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் வங்கி முகவர்களுக்கு பணம் ஏதும் வழங்க தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு வங்கி முகவர்கள் வற்புறுத்தும் பட்சத்தில் தொடர்புடைய வங்கி மேலாளரிடமோ அல்லது வருவாய் நிருவாக ஆணையரகத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 – 425 – 1090 ஐ தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9